# EVILS OF COME[illegible]S.

[Pointing out the pernicious, demoralizing and destructive consequences to individuals, families, and the community at large, from taking a part in, supporting, or sanctioning the performance of village plays.]

# நடன நட்டம்.

பலபல தேசங்களிலே யிருக்கிற சனங்களுக்குள்ளநேகர் தங்கள் கீர்த்திக்காகச் சில சிற்றின்பக்கதைகளை யெடுத்து நாடகங்களாகப் பாடிவைக்க வேறுசிலர் அவைகளை யெடுத்துக் கூத்துப்பழகி விளையாடித் தங்களுக்குந் தங்கள் பிள்ளைகளுக்கும் ஊரவர்களுக்கும் ஆத்தும சரீர நட்டத்தை யுண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். எப்படியெனில் முதலாவது நாடகங்களைப் பாடுகிறவர்கள், ஆடுகிறவர்கள், கேட்கிறவர்கள், பார்க்கிறவர்கள் எவர்களுடைய மனமுஞ் சிற்றின்பத்திலே தாழ்ந்து பரமகாரியங்களைச் சிந்திக்கக்கூடாமல் அவைகளை மறந்துவிட்டு விபசாரம்முதலான பாவங்களிலே யுட்பட்டுப்போகின்றது.

அல்லாமலுங் கூத்தாட்டுவிக்கிறபணிக்கனுக்குப் போசனம் உடுப்புச் சம்பளம் முதலானவைகளைக் கொடுக்கிறதினாலும் விளக்கெண்ணெய்

2d. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [10,000
1842.

மன அறிவுக்கு ... முதலானவைகளுக்கும் கைச் செலவுக்கும் வத்திராபரணங்களுக்கும் மறுவிதமான சோடினைகளுக்கும் பணங்களைக் கொடுக்கவேண்டியிருப்பதினாலும் வேலைசெய்யவேண்டிய நேரத்தை விளையாட்டிலே போக்கிவிட்டு வேலையினால்வரும் பிரயோசனங்களை இழந்துபோவதினாலும் நித்திரை விழித்ததினாலுஞ் சரீரத்தை வருத்துவதினாலும் வியாதிகொண்டு அதற்குப் பரிகாரச்செலவு பண்ணுவதினாலுங் கூத்தக்களரியிலே அடிபிடி சண்டைவராமற் பேணுவதற்குத் தலைமைக்காரருக்குக் கைக்கூலிகட்டுவதினாலும் பணநட்டம் உண்டாகின்றது. அவர்களிலநேகர் சற்றாகிலும் ஊனமானமில்லாமற் பெற்ற பிதாமாதாக்கள், கூடப்பிறந்த சகோதரர்கள், தாங்கள் பெற்ற பிள்ளைகள், போதியமனிதர், இவர்களெல்லாரும் பார்த்திருக்க நின்று காமலீலைக் கடுத்த குறிப்புகளைத் தங்கள் கண், கை, கால் முதலான அவயவங்களினாலே காட்டி அதற் கடுத்த குறிப்பு மொழிகளைப்பேசி இவ்விதமாய்த் தங்களிலே மகிழுகிறார்கள். அதைப்பார்த்திருக்கிற துர்த்த ஸ்திரிகள் இவர்களிலே கண்வைக்க இவர்களும் அவர்களிலே கண்வைத்து ஒருவரிலொருவர் மயங்கிப் பாவத்திலே விழுகிறது மன்றித் தாரத்துக்குட் பட்டவர்கள்தாமுங் குடிக்கலவுகளையுஞ்செய்து கள்ளமார்க்கமாய்க் கூடியுங்கொள்ளுகிறார்கள்.

இப்படி முறைதலைகெட்டு மிருகசாதிகளைப் போலச் சஞ்சரித்துப், பெற்றவர்கள் வளர்த்தவர்கள் தானும் பார்க்கக் கூடாத தீராதவியாதிக

ளிலே அகப்பட்டு அழுந்தி அழ[illegible]வு, பெல
[illegible] சுகம் எல்லாவற்றையு மிழந்து உழைப்புஞ்
ந்தான விருத்தியுமின்றிப் பிற்காலத்திலே அடி
யற்றுப்போகிறார்கள். பின்னுந் தாங்கள் நாட
கத்தை விரும்பிப்பாடி ஆடி அதற்கடுத்த முய
ற்சிகளிலே திரியும்பொழுது பிள்ளைகளுடைய
விளையாட்டுக்களையுந் தகாத பழக்கங்களையுந் த
விர்க்கவும் பிள்ளைகளுக்கு நல்ல கல்விகளைப்ப
டிப்பிக்கவும நல்ல வேலைகளைப்பயிற்றவும் இவ
ர்களுக்கு எண்ணமில்லாததினாலேஅவர்களுடை
யமனமும் பிள்ளைகளுடையமனமும் மேலான
காரியங்களிலே செல்லாமற் கூத்தும் விளையா
ட்டும் பிரதானகாரியமென்றெண்ணி அதையே
பழகிக் கொள்ளுகின்றது. தாங்கள் போகிற
விளையாட்டுக்களரிகளெல்லாம் அவர்களையுங் கூ
ட்டிக்கொண்டுபோய் அதிலே முழுதும் பழக்
கிப் படிக்கவும் வேலைசெய்யவும் அறியாமற்ப
ண்ணிக்கொண்டு தாங்கள்பேசுவதுபோல நொ
ன்னை, தூஷணம், பரிகாசம் முதலான பேச்சு
க்களைப் பேசவும் பயிற்றுமற் பயிற்றிக் கொள்
ளுகிறார்கள். இப்படியே பிள்ளைகளுந் தாங்க
ளும் அறிவுநூல்களை கல்லாமல் மூடராய்ப்
போவதேயன்றி வேலைசெய்து உழையாததினா
லே போசனத்துக்கு வழியில்லாமற் காணிகளை
விற்றுச் சாப்பிட்டுக் கடைசியிலே தாங்களுந் த
ங்கள் பிள்ளைகளும் வறியவர்களாய்க் கெட்டுப்
போகிறார்கள். அல்லாமல் ஊர்ச்சனங்களும்
இவர்கள் காதுக்கின்பமாயுங் கண்ணுக்குக் குளி
ர்ச்சியாயும் இருக்கிற பலபல சிற்றின்பப் பாட்

ன அறிவுக்கு [illegible]
ங்களைப் பி[illegible]த்த அழகான வேஷங்களைப்போ
ட்டுக் கீதவாத்தியங்களுடனே கூத்துக்களை
ஓசையில் முழக்கத்தைக்கேட்ட கேகயம்போ
லவும் விளக்கைக்கண்ட விட்டில்போலவும் மன
மயக்கங்கொண்டு அவைகளைப் பார்க்கவுங் கே
ட்கவும்விரும்பித் தங்கள் வேலைகளைவிட்டு அவ்
விடத்திற்குப் போய்த் தங்கள் நேரத்தை வீண்
போக்கிப் பொருள் நட்டத்தை அடைகிறதும
ன்றிப் பசியோடும் நித்திரையோடுஞ் சன நெ
ருக்கத்துக்குள் இருக்கிறதினாலே சரீரவருத்த
ப்பட்டு வியாதிகொண்டு கெட்டுப் போகிறார்க
ள். மேலும் அந்தச் சிற்றின்பப் பாட்டுக்களை
க் கேட்பதினாலும் அவர்களுடைய வேஷங்க
ளைக் காண்பதினாலும் மனமயங்கி விகாரங்கொ
ண்டு பலவகைப் பாவங்களுக்குமுடன்படுகிறா
ர்கள். இதுவுமல்லாமற் கூத்தினிமித்தமாக அ
நேகர் குடித்து வெறித்திருக்கிறவர்களாயுங் க
ள்வராயுந் தூர்த்தராயும் பொய்யராயும் விலங்
கில் அகப்பட்டவர்களாயுங் கெட்டநடக்கையுள்
ளவர்களாயுங் கடுமையான வியாதியடைந்தவர்
களாயுந் தங்கள் காணிமுதலானவைகளை விற்று
யாசகத்துக்குப் போனவர்களாயு மிருக்கிறார்
கள். அன்றியும் அநேகம்பேர் கூத்துப்பார்க்க
ப்போனவிடத்திலே தாங்கள் முன்னே யிருக்க
வேண்டுமென்றுந் தாங்கள் முதன்மைபெறவே
ண்டுமென்றும் மற்றவர்கள் தங்களைக் கனிச
மாக நடப்பிக்க வேண்டுமென்றும் முழுநோக்
கங்கொண்டு நடக்கிறார்கள். அதிலே தவறினா
ல் எச்சுப்பேச்சுப்பட்டு ஒருவரை ஒருவர் அடி

ந்துக் கல்லாலே எறிந்து கைகால் முறிந்தவர்களுந் தலையுடைந்தவர்களும் வேறு காயங்கள் பட்டவர்களுமாகப் போகிறார்கள். அநேகர் தங்கள் காதுகளையுங் கடுக்கன்களையும் இழந்து போகிறார்கள். அநேகர் உடுப்புக்களையு மிழந்து நிருவாணிகளாய்ப் போகிறார்கள். அநேக பெண் சனங்கள் தங்கள் வத்திரம் ஆபரணம் முதலானவைகளையு மிழந்து துட்டராலே மானக்கேடும் பட்டுப்போகிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களினாலே நியாயத்தலங்களிலே போய் இராச ஆக்கினைக்குட்பட்டு விலங்கு, மறியல், ஊழியம் இவைகளில் அகப்படுகிறார்கள். இப்படியே உத்தியோககாரருந் தங்கள் உத்தியோகத்தை இழந்துபோக வருகிறதுமுண்டு. இப்படியெல்லாம் பிரயாசப்பட்டு இந்தக் கூத்துக்களையாடிப் பெற்றுக்கொள்ளும் பிரயோசனமென்ன? ஒன்றுமில்லையே. அப்படியிருக்க அதிலே தங்கள் வாழ்நாளையும் மற்றெல்லாவற்றையும் போக்கி விடுகிறவர்கள் புத்திமான்களா?

ஐம்பது இறையாற்செலவிட்டு ஓரிராத்திரிக்கூத்தாடி விடிந்தவுடனே ஐயோவென்ற சத்தத்துடனே போகவேண்டியது. ஒருத்தன் பத்துப்பாகத் தண்ணீரிலே யிறங்கி முத்துக்களை எடுக்கக் கூடியதாயிருக்க அதைவிட்டு ஐம்பதுபாகத்தண்ணீரிலே யிறங்கிச் சாதாழை யள்ளுகிறது புத்தியோ? அதுபோலக் கொஞ்சப் பணத்தைச் செலவிட்டு நல்ல கல்விகளைப் படியாமல் அநேகம் பணத்தைச் செலவிட்டுக் கூத்தாடுகிறார்கள். இயாதொரு பணத்தையுஞ் செலவி

டாமல் கத்தாவைத் துதித்து அவருடைய கிரு பையைத் தேடுவதைவிட்டு அநேக பணத்தைச் செலவிட்டுச் சித்திரப் பாட்டுக்களைப் படித்துக் கூத்தாடி நரகத்தைச்சம்பாதிக்கிறார்கள். ஒருவருத்தமு மில்லாமல் நல்லொழுக்க முள்ளவர்களாயிருந்து அறிவாளிகள், சங்கையுள்ளவர்கள், மேன்மையுள்ளவர்கள் என்கிற பேரைப் பெற்றுக்கொள்ளாமல் வருத்தப்பட்டுப் பணத்தைச் செலவிட்டுக் கேலிக்காரர், நொன்னை பேசுகிறவர்கள், உரோசமற்றவர்கள் என்கிற பேரைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இம்மையிலே இப்படிப்பட்ட கேடுகள்உண்டாகிறதே யன்றி இந்தக்கூத்தினாலே மறுமையிலும் எத்தனைபெரிய கேடு உண்டாகிறதற் கேதுவாயிருக்கிறது நாடகங்களிலே செலுத்துகிற அறிவைக் கத்தாவிடத்திற் செலுத்தினால் எத்தனை பாக்கியம்! கூத்துக்குச்செலவிடுகிற பணத்தை உங்கள் பிள்ளைகளையும் உங்களையும் அறிவிலே வளர்க்கத்தக்க கல்விக்காகச்செலவிட்டால் எத்தனை மேன்மை! அல்லது தரித்திரருக்குக் கொடுத்தால் எத்தனை நன்மை! அதிலேசெலுத்துகிற சிந்தனையைத் தேவ சிந்தனையிலே செலுத்தினால் எத்தனை பாக்கியம்!

உலகமுழுதையும் அரசாட்சிசெய்கிற ஒரு இராசா உண்ணவும் உடுக்கவும் வகையற்றுத் தெருவிலேதிரிந்த ஒருவனைக்கண்டிரங்கி அவனை அழைத்துக் கொண்டுபோய்த் தம்முடைய வீட்டிலேவைத்து உண்ண உடுக்க வேண்டிய எல்லாவற்றையுங்கொடுத்துப் பின்பு அவனை நோக்

நீ என்னுடைய பள்ளிக்கூடத்திலே நியாயசாத்திரங்களைப் படித்து ஒழுங்காய் நடந்தால் என்னுடைய அரசாட்சியை உனக்குக் கொடுப்பேனென்று அறிவித்துவைத்தார். அவன் சில காலம் இருந்து உண்டு உடுத்துப் புஷ்டியடைந்தமாத்திரத்திலே ஆங்காரங்கொண்டு களவிலும் விபசாரத்திலுந் தலைப்பட்டு அதிலே மிகவும் வல்லவனானான். அதை இராசா வறிந்து அவனை அழைத்து நானுன்னை நியாயசாத்திரம் படிக்கச்சொல்லிவைக்க நீ களவையும் விபசாரத்தையுங் கற்றுக்கொண்டாயே, நீ நியாயசாத்திரத்தைப் படித்தால் என் மகனைப்போல அரசாட்சிக்காரனாயிருப்பாயே, உனக்கேனிந்தப் பொல்லாத புத்தியென்று கண்டித்து விட்டுவிட்டார். அப்பொழுது அவன்போய் இராசாவுடைய மகன் ஒழுங்காய் நடந்தபடியாலிராசா என்னை இவ்வளவாய்க்கண்டித்தார், இதற்கு நான் வகைஅறிவேனென்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு இராசாவின் மகனிடத்திலேபோய் உறவுகூடி அவனையும் எய்த்து நானிப்பொழுது நடக்கிறவழியிலே காண்கிற இன்பத்தை நீயொருக்காலுங் கண்டதில்லை அதை நானுனக்குக் காண்பிப்பேனென்று சொல்லி அழைத்துக்கொண்டுபோய் ஒரு பொல்லாங்கிலே உட்படுத்தினான். அது அவனுடையமனதுக்குஇன்பமாயிருந்ததினாலே இவ்விருவரும் ஒருமித்துத் தாங்கள்கற்ற நியாயசாத்திரத்துக்கெதிரிடையான பொல்லாங்குகளைச் செய்துவந்தார்கள்.

இப்படி வருங்காலத்தில் ஒரு நாள் இராசா எ

...ன்னைக் குற்றவாளியென்று கண்டித்தாரே,இ...
மகன்கூடக் குற்றவாளியாய்ப் போனானென்...
கண்டு வெட்கப்படட்டுமென்று சொல்லிக்கொ
ண்டு இராசாவுடைய நியாயாசனத்துக்கு முன்
பாக வந்து நின்றவர்களைப் பிடித்து இழுபறிப
ண்ணிக் கலாதியுண்டாக்கி அவருடைய நியாயத்
தை யெல்லாங்கொலைவுசெய்தான். இராசா அ
தைக்கண்டு அவ்விருவரையும் பிடித்து மறியலி
லே போடுவித்தார். இந்த உவமையிலேசொ
ல்லப்பட்ட மனிதன் செய்ததுபோல நீங்களு
ம் பராபரனுடைய கட்டளைக்கு விரோதமாய்க்
க் கூத்திக் சூதுமாடிப் பரிசுத்த ஓய்வுநாளைக்
கொலைச்சலாக்கி மற்றுங் கட்டளைகளுக்கு வி
ரோதமாய் நடக்கிறதுமன்றி விசுவாசப் பலவீ
னமுள்ள கிறிஸ்தவர்களை உங்கள் பாவத்திலே சி
க்கப் பண்ணுகிறீர்கள். இப்படிப் பட்டவர்க
ளுக்குப் பராபரனுடைய நீதிப்படி என்னவரு
மென்று நினைக்கக்கடவீர்கள்.

சனங்களே கத்தாவுங்களுக்குக் கல்வியையுஞ்
செல்வத்தையும் பலத்தையும் ஆயுளையும் என்
னத்துக்குத் தந்தார்?தம்மை நிந்திக்கவுந் தமது
சிட்டிகளாகிய மனிதருக்கு நட்டத்தையுண்டா
க்கவும் அவர்களையும் உங்களையும் பாவத்திலுட்
படுத்தவுமோ! நீங்கள் நன்மைசெய்தால் உங்க
ளுக்கு மேன்மையில்லையோ? உங்களுக்கும் உங்
கள் பிள்ளைகளுக்கும் ஊரவர்களுக்கும் உண்டா
யிருக்கிற ஆத்துமசரீரவாழ்வை ஏன் கெடுக்கிறீ
ர்கள்? பராபரனுங்களுக்குத் தந்த ஐசுவரியத்தி
னாலே உங்கள் பிள்ளைகளுக்கும் உலகத்தாருக்கு

ம் நன்மைகளை யுண்டாக்கி அவர்தந்த அறிவினா ல் அவரை அறிந்துவணங்கி மோட்சத்திலேபே ரின்பத்தைப் பெற்றிருக்கவகைதேடுங்கள்

இக்காரியங்களெல்லாஞ் சரியென்று இத்தே சத்திலேயிருக்கிற அறிவுடைய முதியோர்களும் பெரியோர்களும் அறிந்திருந்தாலுந் தங்கள் சந் தானத்திலுள்ள புத்தியற்ற வாலிபர்கள் கூத்தா டப் பார்த்துக்கொண்டு கண்சாடையாயிருக்கி றார்கள். நீங்களிப்படியிருப்பதினாலே சிற்றின்ப த்திலேவிரும்பி நடக்கிறசிலர் நாடகங்களைப் பா டிக் கூத்துக்கு முயற்சிபண்ணி உங்கள்பிள்ளைக ளைக் கெடுக்கிறார்களே. உங்கள்பிள்ளைகள் கெட் டுப்போவது உங்களுக்குப் பிரியமா! அவர்களை யித்தக் கேட்டிலிருந்து விலக்கிக்கொள்ள உங்க ளுக்குத் தத்துவமும் புத்தியுமில்லையா? உங்களி லநேகர் ஒருமனப்பட்டுக் கூடி நமது பிள் ளைகள் கெட்டுப்போகவும் அவர்களைத் துற்ச னர் கெடுத்துப்போடவும் விடாதபடிக்கு நா மே முயன்று நிற்போமென்று தீர்மானித்துக் கொண்டு உங்கள்தேசத்திலே கூத்தென்ற பே ருமில்லாமற் போக நாடகங்கள் எல்லாவற்றை யுமெடுத்துச் சுட்டுப்போடுங்கள். சொற்கே ளாதபிள்ளைகளைப் பிடித்துக் கண்டித்து அறிக் கைபண்ணுங்கள். இப்படி நீங்கள் பிள்ளைகளை ப் பொல்லாங்கிலே செல்லவிடாமற் காத்து ந டத்தினால் உங்கள் தேசம் எத்தனை செழிப்பாயி ருக்கும். உங்கள்பிள்ளைகள் எத்தனை பாக்கிய ராயுஞ் சுகமுள்ளவர்களாயுமிருப்பார்கள். உங் கள் அசட்டைத்தனத்தினாலே அவர்கள் கெட்டு

னை அறிவு

ப்போனால் உங்களுக்கு நட்டமில்லையா, நீங்கள் வருந்தித் தேடின பணங்களை அவர்கள் வீணிலே செலவிட்டால் உங்களுக்குத் துக்கமில்லையா. ஆகையால் உங்கள் பிள்ளைகளை நேரான வழியிலே நடத்த முயற்சியுள்ளவர்களாயிருங்கள்.

---

இப்படிக் கூத்தினாலே கெட்டுப்போன
அநேகரில் ஒருவனுடைய சரித்திரம்.

ஒருமனிதன் மூவாயிரம் இறையாலுக்குத் தக்க ஆஸ்தியும் அதற்கடுத்த அணிகளும் நல்லவீடு வளவுமுடையவனாய் அந்தக்குறிச்சியிற் குடிகளுக்குள்ளே கணிக்கப்பட்டவனும் மதிக்கப்பட்டவனுமாக விருந்தான். அவனுக்கு இரண்டு ஆண்பிள்ளைகளுண்டு. அவர்களில் மூத்தமகனுக்குத் தங்களுக்குச் சரிவந்த இடத்திலே இரண்டாயிர இறையாலளவுக்குச் சீதனமும் வாங்கிக் கொடுத்துக் கலியாணம்முடித்துவைத்துச் சில காலத்திற்பின் செத்துப்போக அவன் பிதா மாதா வழியாய் வரப்பட்ட ஆஸ்திகளையும் பெற்றுச் செல்வமுள்ளவனாக விருந்தான்.

அப்படி யிருக்குங்காலத்திலே ஒரு கூத்துவிளையாடத் தொடங்கிப் பழகினபோது குரல் செவ்வையில்லையென்று கண்டு திருந்தும்படி கள்ளுக்குடிக்க வேண்டுமென்று தொடங்கி நாளுக்குநாட் கொஞ்சங் கொஞ்சமாகக் குடித்துக் குடிகாரனானான். அதின்பின் தன் சமவேலைமுற்றையும்விட்டு அந்த ஊர்களிலே ஆடுகிற கூத்துகளெல்லாவற்றிலுந் தானும்போய்ப் போய்க் கூடிக்கொள்ளவும் மறுஊர்களிலே கூத்துப் பார்க்கவுந் திருவிழாப் பார்க்கவும் வேசிக

ளோடே சகவாசம்பண்ணவுந் தொடங்கிக் கூத்தாடிகள் குடிகாரர் தூர்த்தர்க ளெல்லாரோடுஞ் சிநேகம்பண்ணித் திரிந்தான். அதினாலே மூட்டாளியாய் வீட்டிலிருந்த உடைமைபண்டங்களை அடைவுவைத்தும் விற்றுங் கூத்திலுங் குடியிலும் அழித்துப் பின் ஊரவர்களிடத்திலே கடன்வாங்கிச் செலவிடத்தொடங்கினான். அப்படியிருக்கையில் அவனுடைய கன்றுகாலிகள் பராமரிப்புத் தாழ்ச்சியினாலே செத்துப்போனதும் அற்றைவிலைக்கு விற்றுப்போட்டதுமாயழிந்துபோய்விட்டன. பின்பு அவனுக்குக் கடன் கொடுப்பாருமில்லாமல் தன்னுடைய காணிபூமிகளையும் பெண்டாட்டியுடைய காணிபூமிகளையும் விற்றுச் செலவிட்டுவர அதினாலவனுக்கும் அவளுக்கும் வெறுப்பாகித் தினந்தினம் அடிபிடியுஞ் சண்டையுமாக விருப்பார்கள். இதினிமித்தமும் இவனுடைய வீண்செலவினிமித்தமும் மாமன் மைத்துனன் இனத்தவர்களுங் கோபமாகி இவனுக்கு யாதொரு உதவியுஞ்செய்யாமல் விட்டுவிடப் பெண்டாட்டியும் இவனை விட்டுவிலகிப் பலமுறையிற் பிரிந்திருந்தும் வடுவுக்கு அஞ்சிப் பின்னுங் கூடியிருப்பாள். இப்படியிருக்க ஒருமுறை அவன் வெறியோடே வந்து பெண்டாட்டியையடிக்க அவளுடைய கை முறிந்து சிலநாளாகக் கிடந்து வருத்தப்பட்டுச் செத்துப்போனாள். பின்பு அவனுடைய வீடுவளவும் மற்றும் ஆதனங்களுங் கடனுக்காக விலைப்பட்டுப்போகத் தன் சிறுபிள்ளைகளிரண்டுந் தானுமாக அலைந்து திரிந்து பிள்ளையில் ஒன்று

செத்துப்போக அவனும் பிரதேசத்துக்குப் போய்ச் செத்துவிட்டான். அவனுடைய மகளைப்பிள்ளையொன்றும் அந்தரித்துத்திரிகின்றது. இந்த மாறுதலெல்லாம் பதினைந்து வருடத்துக்குள்ளாகச் சம்பவித்தது. இப்படிச் சம்பவித்தவைகளெல்லாவற்றிற்கும் மூலமாயிருந்தது அவனுடைய தொடங்கின கூத்து அல்லவா, நெருப்புத் தன்னைத்தொட்டவர்களைமாத்திரஞ்சுடும் ஆடலோ தன்னைத் தொட்டவர்களையுங் கண்டவர்களையுங் கேட்டவர்களையும் சுடும், தானுண்டான இடத்தையுஞ் சுடும், தன்னைக் கொண்டாடுகிறவனையும் அவன் மனைவியையும் அவன் பிள்ளைகளையுஞ் சுடுஞ், சன்மைமுதலான சகலத்தையுஞ் சுட்டு மறுமையிலே அவனுடைய ஆத்துமாவை நித்தியகாலத்துக்குஞ் சுடும்.

இப்படிப்பட்ட கூத்தை நல்லதென்று கொண்டாடுகிறவன் நெருப்பை மடியிலே கட்டுகிறவனைப்போலவிருப்பான். நெருப்பினுடையதீமை ஒருவனுடைய இச்சீவியத்தோடே நின்றுபோம். இதுவோ அவனையும் அவனுடைய சந்தானத்தையும் ஆத்தும பரியந்தம் ஒன்றாகத் தொடர்ந்து மறுமையிலுங் கெடுக்கும்—இப்படியிருப்பதினால் கூத்தை உங்கள் சத்துருவென்று கண்டு விலகியோட வகைபார்ப்பீர்களாக.

முற்றிற்று.